வேலைப்பட்டியலிலும் இடம் பெறவில்லை. எனவே அபிவிருத்தி வேலைகள், பிற சாலைகள் என்ற தலைப்பின்கீழ் எடுத்துச் செயலாற்ற வேண்டிவரும். திட்டகால வேலைப்பட்டியலில் இந்தச் சாலை அபிவிருத்தி வேலை இடம் பெறவில்லை. வருங்காலத்தில் தயாரிக்கப்படவிருக்கும் சாலை அபிவிருத்தித் திட்டங்களில் நிதிவசதியை அனுசரித்துத்தான் இதையும் சேர்த்து ஆவன செய்யவேண்டி வரும்.

Papanad-Sholankarai Bridge.

* 504 *Q.*—THIRU *N. DENNIS*: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Papanad-Sholankarai bridge in Thanjavur district is to be reconstructed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பாலத்தைப் புதுப்பிக்கும் வேலை முடிவடைந்து, போக்குவரத்திற்கு 29—4—1971 மகல் திறந்து விடப்பட்டுள்ளது.

நகராட்சிகளுக்கு நிதிக் குழுக்கள்

* 505 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் புதிதாக நிதிக் குழுக்கள் அமைத்திடக் கோரி தமிழ்நாடு அரசு நகராட்சிகளுக்கு தாக்கீது அனுப்பி உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இவ்வாறு நிதிக் குழுக்கள் அமைக்கவேண்டுமென்று நகராட்சிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனவா? அமையவிருக்கும் நிதிக் குழுக்களின் பணிகள் என்னவென்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னையில் நடந்த தமிழக நகரவைத் தலைவர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்களின் கூட்டு மாநாட்டில் அப்போதைய உணவு-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமை உரையில், நகரவைகள் தங்கள் நிதிநிலையைக் கண்காணிக்கவும் நகராட்சிகளில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் வசதிகள் செய்யப்பட்டனவா என்பதைக் கண்காணிக்கவும் ஒரு நிதிக்குழு அமைத்திட வகை செய்யவும், அக்குழு நகரவையின் தலைவர், ஆணையர் மற்றும் நகரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கத்தினரைக் கொண்டதாக இருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தார். நகரவைகள் ஓர் குறிப்பிட்ட வேலையைச் செயல்படுத்த, சட்டத்தில் குறிப்பிடாத ஆலோசனைக் குழுக்களை 1920-ம் வருடத்திய தமிழக மாவட்ட நகராட்சி சட்டத்தின் 23-வது பிரிவின்படி அமைக்க வழியுண்டு. இப்பிரிவின்கீழ், நகரவைகள் மேலே குறிப்பிட்ட நிதிக்குழுக்களை அமைக்க கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 17—12—1970-ம் தேதிய அரசாணை எண் 2364-ல் நகரவைகளைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன்படி நகரவைகள் நிதிக்குழுக்கள் அமைத்துள்ளன. இக்குழுக்களுக்கு நகரவைத் தலைவர் தலைவராக இருப்பார். அதில் ஆணையரும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

1971 ஜூலை 28]

திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்த நிதிக்குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உத்தரவிடப்படுமா ? ஏற்கனவே ஆசிரியர்களை மாற்றுவதில் பஞ்சாயத்துக்கள் அட்ஹாக் கமிட்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். அதேபோல் இந்தக் குழுக்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டால் அவர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்க சௌகரியமாக இருக்கும். ஆகவே அரசு இதைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இவை, நகராட்சிகளின் நிர்வாகத்தைப் பற்றிக் கவனிப்பதற்காக அமைக்கப்படுகின்ற குழுக்கள். ஆகவே நகரசபை உறுப்பினர்தான் அதில் இடம் பெற்றிருக்க முடியும். ஆகவே நகராட்சித் தலைவர், ஆணையர், நகராட்சி உறுப்பினர்களாக இருப்பவர்களில் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருவர் இருக்கவேண்டுமென்ற நியதி இருக்கிறது. வெளியே இருப்பவர்கள் அதிலே உறுப்பினராக இருக்க இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்படிப்பட்ட நிதிக்குழுக்களை எல்லா நகராட்சிகளும் அமைக்கவேண்டுமென்று குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறதா ? இதுவரையில் எத்தனை நகராட்சிகள் அப்படிப்பட்ட குழுக்களை அமைத்திருக்கிறார்கள் ? அப்படி அமைப்பதற்கு ஏதாவது காலக்கெடு நிச்சயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அமைக்கவேண்டுமென்றுதான் 17—12—1970-ல் அரசு ஆணை பிறப்பித்து நகரமன்றங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. காலக்கெடு குறிப்பிடவில்லை. எவ்வளவு நகரமன்றங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தயாரித்துத் தரலாம்.

அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கதிர்வீச்சுப்பிரிவு

* 506 **வினா—திரு. என். எஸ். பலராமன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ்-ரே யூனிட் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) அரக்கோணம் அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ்-ரே யூனிட் அமைப்பதற்கான ஒப்புதல் உடனடி வழங்கப்பட்டிருக்கிறது. விரைவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி, அரக்கோணம்பற்றியது.

திரு. நா. வீராசாமி : எக்ஸ்-ரே யூனிட் அமைப்பதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்-ரே யூனிட்டும் வந்திருக்கிறது. ஆனால் அதைப் பொருத்துவதற்கு அங்கு கட்டடம் இல்லை. பழைய கட்டடத்தில் அதைப் பொருத்தினால் நிச்சயம் அந்த இயந்திரம் பாழாகிவிடும். எனவே ஒரு புதிய கட்டடத்தை அங்கே அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் துறை அவ்வளவு பழைய துறை அல்ல. ஆகவே பழைய கட்டடத்தில் பொருத்துவதற்கு எண்ணம் இல்லை. ரூ. 37,000 கட்டடம் கட்ட, ரூ. 50,000 யூனிட் அமைக்க, ரூ. 8,500 பிற கருவிகளுக்கு என்ற ஏற்பாடு இருக்கிறது.